கொடாக் மஹிந்திரா வங்கி லிமிடெட்

பதிவு அலுவலகம்: 27, பிகேசி, C–27, ஜி பிளாக், பாந்த்ராகுர்லா வளாகம், பாந்த்ரா (கி),
மும்பை – 400 051, கார்ப்பரேட் அடையாள எண் L65110MH1985PLC038137. கிளை அலுவலகம்:
கொடாக் மஹிந்திரா வங்கி லிட்., கொடாக் இல்லம், 22, எம்.ஜி சாலை, பெங்களூர்–560 001

பிற்சேர்க்கை–IV–A
[விதி 8(6) விதிகளை காண்க]

ஏலம் மற்றும் விற்பனை அறிவிப்பு

(தனி ஒப்பந்தம்)

கடனீட்டுச் சொத்து உரிமை (அமலாக்கம்) விதிகள், 2002 இன் விதி 8(6) விதிகளுடன் பத்திரமயமாக்கல் மற்றும் நிதிச் சொத்துகளை மறுசீரமைத்தல் மேலும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கம் சட்டம், 2002 கீழ் அசையா சொத்துகள் விற்பனைக்கான ஏலம் மற்றும் விற்பனை அறிவிப்பு.

இதன்மூலம் பொதுவாக பொதுமக்களுக்கும் குறிப்பிட்டு கடன்தாரர்களுக்கும் கொடாக் வழங்கப்படும் அறிவிப்பாவது கடனீட்டு கடனீந்தோரிடம் அடமானம்/உரிமை அளிக்கப்பட்ட, கொடாக் மஹிந்திரா வங்கி லிமிடெடின் (கடனீட்டு கடனீந்தோர்/கொடாக் மஹிந்திரா வங்கி லிமிடெட்) அதிகாரப்பூர்வ அதிகாரியால் அடையாளப்பூர்வ சுவாதீனம் செய்யப்பட்டிருக்கும் கீழே விவரிக்கப்பட்ட அசையா **சொத்துகள்/சொத்து ("அசையா சொத்துகள்/சொத்து"), (1) M/s. விராதரா இம்பெக்ஸ்,** எண் 36, ஆர்.கே.வி. நகர், IIவது தெரு, திருநகர் **காலனி, ஈரோடு–638003, மேலும்: M/s. விராதரா இம்கெக்ஸ், பிரதிநிதியாக அதன் உரிமையாளர் திருமதி உஷா தேவி,** எண் 36, ஆர்.கே.வி. நகர், IIவது தெரு, திருநகர் காலனி, ஈரோடு–638003 (கடன்தாரர்), **(2) திருமதி உஷா தேவி, உரிமையாளர்,** M/s. விராதரா இம்பெக்ஸ், எண் 36, ஆர்.கே.வி. நகர், IIவது தெரு, திருநகர் காலனி, ஈரோடு–638003, **மேலும்: திருமதி உஷா தேவி, க/பெ. கௌதம் சந்த் பன்சிதர்,** எண் 147, முதல் தளம், ராமமூர்த்தி நகர், கிருஷ்ணம்பாளையம் சாலை, ஈரோடு–638003. **மேலும்: திருமதி உஷா தேவி, க/பெ. கௌதம் சந்த்,** சுந்தர் நகர், சோதன், பர்மீர், ராஜஸ்தான், அஞ்சல் குறியீடு–344702 **(ஜாமீன்தாரர்/சொத்து உரிமையாளர்). (3) திரு. கௌதம் சந்த் பன்சிதர், M/s. விராதரா இம்பெக்ஸ், எண் 36,** ஆர்.கே.வி. நகர், IIவது தெரு, திருநகர் காலனி, ஈரோடு–638003. **மேலும்: திரு. கௌதம் சந்த் பன்சிதர்,** எண் 147, முதல் தளம், ராமமூர்த்தி நகர், கிருஷ்ணம்பாளையம் சாலை, ஈரோடு–638003 **(ஜாமீன்தாரர்)** ஆகியோரிடமிருந்து கடனீட்டு கடனீந்தோருக்குரிய நிலுவை மற்றும் செலுத்த வேண்டிய **14.07.2020** தேதிய **₹1,24,97,033.00** (ரூபாய் ஒரு கோடியே இருபத்து நான்கு லட்சத்து தொண்ணூற்றேழாயிரத்து முப்பத்து மூன்று மட்டும்) கூடுதலாக கடனீட்டு கடனீந்தோருக்கு ஒப்பந்த விகிதத்திலான வட்டி, செலவுகள் மற்றும் கட்டணங்கள் ஆகியவற்றை மீட்பதற்காக "**உள்ளது உள்ளவிடத்தில்**" மற்றும் "**உள்ளது எதுவோ அது**" அடிப்படையில் **20.08.2020** நாளில் விற்பனை செய்யப்படவுள்ளது.நிர்ணயவிலை **₹86,00,000/- (ரூபாய்எண்பத்தாறுலட்சம்மட்டும்)**மேலும்முன்வைப்புத்தொகை**₹8,60,000/–(ரூபாய்எட்டு லட்சத்து அறுபதாயிரம் மட்டும்).** தெரிந்த வில்லங்கங்களுடன் அசையா சொத்துகள்/சொத்தின் குறு விவரம் மற்றும் சில விற்பனை விதிமுறைகள்:

கடன் கணக்கு எண்	கடன்தாரர்/உப–கடன்தாரர்(கள்)/ ஜாமீன்தாரர்(கள்) பெயர்	கோரிக்கை அறிவிப்பு தொகை மற்றும் நாள்	நிர்ணய விலை (RP)	முன்வைப்புத்தொகை (நிர்ணய விலையின் 10%) மற்றும் கடைசி நாள்	பார்வையிடும் நாள் & நேரம்	ஏலத் தேதி & நேரம்	மொத்த நிலுவைத்தொகை	தெரிந்த வில்லங்கங்கள், ஏதேனுமிருந்தால்
கடன் கணக்கு எண் WC_BBA. 405044040947	M/s. விராதரா இம்பெக்ஸ் (2) திருமதி உஷா தேவி (3) திரு. கௌதம் சந்த் பன்சிதர்	கோரிக்கை அறிவிப்பு நாள் 15–11–2018, 14.11.2018 தேதியன்று ₹99,47,590.52/–	₹86,00,000/– (ரூபாய் எண்பத்தாறு லட்சம் மட்டும்)	₹8,60,000/– (ரூபாய் எட்டு லட்சத்து அறுபதாயிரம் மட்டும்) 19.08.2020 அன்று அல்லது அதற்கு முன்பு.	12.08.2020 அன்று காலை 11.30 மணி முதல் பிற்பகல் 3.30 மணி வரை	20.08.2020 காலை 11.00 மணி	₹1,24,97,033/– (ரூபாய் ஒரு கோடியே இருபத்து நான்கு லட்சத்து தொண்ணூற்றேழாயிரத்து முப்பத்து மூன்று மட்டும்)	இல்லை

அசையா சொத்துகள்/சொத்து விவரங்கள்: ஈரோடு மாவட்டம், ஈரோடு பதிவு மாவட்டம், ஈரோடு சார்பதிவு மாவட்டம், ஈரோடு வருவாய் மாவட்டம், ஈரோடு வருவாய் தாலுகா, ஈரோடு நகராட்சி எல்லைக்குள், ஈரோடு நகர், பழைய நகராட்சி வார்டு எண் 4, பழைய வருவாய் வார்டு–I, பழைய S.F. எண் 480, பழைய டி.எஸ். எண் 14/1, 14/2, புன்செய் ஏக்கர் 5.68 1/2 இதற்கான டிராமா Rs.6.86, பழைய வருவாய் வார்டு எண் III, பழைய டி.எஸ். எண் 15, புன்செய் ஏக்கர் 0.63 இதற்கான டிராமா Rs.0.71, பழைய வருவாய் வார்டு எண் III, பழைய டி.எஸ். எண் 16, புன்செய் ஏக்கர் 1.91 இதற்கான டிராமா Rs.1.14, மொத்தத்தில் புன்செய் ஏக்கர் 8.22 1/4 இதற்கான டிராமா Rs.8.71 இதில் புன்செய் ஏக்கர் 6.60 இதற்கான டிராமா Rs.7.39 பரப்பளவு நிலம் ஈரோடு கூட்டுறவு வீடு அடமான வங்கி லிட்., எண் 9782 மூலம் வாங்கப்பட்டுள்ளது, சாலைகள் மற்றும் பொது இடங்கள் அமைந்த வீட்டு மனைகளாக பிரிக்கப்பட்டது மேலும் ஈரோடு மாநகராட்சி அனுமதி எண் T.P/DTP/158/1965 மூலம் அனுமதி பெற்றது மனை எண் 9 இல் RCC கட்டிடம் பின்வரும் எல்லைகளுடன் தெற்கு–வடக்கு கிருஷ்ணம்பாளையம் சாலையின் **கிழக்கு,** 30 அடி அகலம் ஆர்.கே.வி. நகர் முதல் தெருவின் **மேற்கு,** R பத்மநாபன் சொத்தின் **வடக்கு,** ஜெகன்நாதன் சொத்தின் **தெற்கு.** இந்த மேற்கூறிய எல்லைகளுக்குள் விஸ்தீரணம் கிழக்கு–மேற்காக வடக்குப் பக்கத்தில் 26 மீ., கிழக்கு–மேற்காக தெற்குப் பக்கத்தில் 23.6 மீ., கிழக்குப் பக்கத்தில் வடக்கு தெற்காக 9.1 மீ., மேற்குப் பக்கத்தில் வடக்கு–தெற்காக 8.0 மீ., மேலும் அதிலிருந்து தொடர்ந்து கிழக்கு நோக்கி கிழக்கு–மேற்காக 2.8 மீ., மேலும் அதிலிருந்து தொடர்ந்து தெற்கு எல்லை வரை 1.1 மீ., மொத்தத்தில் விஸ்தீரணம் 2645 சதுரடி (அல்லது) 245.8 ச.மீ. நிலம் அதிலுள்ள R.C.C. கட்டிடத்துடன் வழக்கமான பாதை உரிமைகளுடன் நில பயன்பாட்டு உரிமைகள் மற்றும் முந்தைய ஆவணங்களில் கொடுக்கப்பட்ட அனைத்து உரிமைகளுடன்.

மேற்கூறிய சொத்து புதிய சர்வே வார்டு–A, புதிய பிளாக் எண் 4, புதிய டி.எஸ். எண் 9 இல், புதிய க. எண் 25, ஆர்.கே.வி. நகர், முதல் தெரு, (நத்தம் புதிய ஆர்.எஸ்.எஃப்.A–4/10) இல், ஈரோடு மாநகராட்சி எல்லைக்குள் அமைந்துள்ளது.

பொது ஏலம் விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள்: (1) விற்பனை கண்டிப்பாக இதன்கீழ் குறிப்பிட்ட விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள் மேலும் திட்டமிடும் ஏலதாரர்களால் சமர்ப்பிக்கப்பட வேண்டிய விலைப்புள்ளி/ஒப்பந்தப்புள்ளி ஆவணத்தில் குறிப்பிட்ட விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளுக்கு உட்பட்டது. **(2)** அசையா சொத்துகள்/சொத்து தெரிந்த வில்லங்கங்கள் ஏதேனுமிருந்தால் உட்பட "**உள்ளது உள்ளவிடத்தில், உள்ளது உள்ளவாறு மேலும் உள்ளது எதுவோ அது அடிப்படையில்**" விற்பனை செய்யப்படும். ஏலத்தின் கீழான அசையா சொத்துகள்/சொத்து இங்கே குறிப்பிட்ட நாள் மற்றும் நேரத்தில் **12.08.2020 காலை 11.30 மணி முதல் பிற்பகல் 3.30 மணிக்குள்** பார்வையிடப்படலாம். மேற்கொண்டு, ஏலப்புள்ளி விண்ணப்பப் படிவம், முன்வைப்புத்தொகை (EMD) சமர்ப்பித்தல் தொடர்பான விசாரணைகள் அல்லது சந்தேகதீர்வுக்கு, **கொடாக் மஹிந்திரா வங்கி லிமிடெடின்** அதிகாரப்பூர்வ அதிகாரியை தொடர்பு கொள்ளவும் (தொடர்பு விவரங்கள் விதி (4) இல் குறிப்பிடப்பட்டுள்ளன. ஏலம் நடத்துவதில் ஏதேனும் தொழிற்நுட்ப கோளாறு அல்லது பிழை நிகழுமானால் ஏலம் கிளை அளவில் நடத்தப்படக் கூடும். இருந்தபோதும், அதிகாரப்பூர்வ அதிகாரி விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளை மாற்ற அல்லது திருத்த முழு தனிவிருப்ப உரிமை கொண்டிருப்பார். **(3)** சந்தைப்படுத்த அல்லது எதிர்நோக்கும் ஏலதாரர்கள்/கொள்முதலாளர்களை தேடுவதற்காக நாங்கள் உள்ளூர் சந்தைப்படுத்தும் முகமை/சேவை வழங்குனரை நியமித்திருக்கிறோம் இது சர்பாசி சட்டத்தின் விதிமுறைகளின்படி ஏலம் செயல்பாட்டின் நிர்ணயத்தில் எங்களுக்கு உதவும். **(4)** ஒப்பந்ததாரர்கள்/விலைப்புள்ளியாளர்கள்/ஏலதாரர்கள்/கொள்முதலாளர்கள் எங்கள் அதிகாரப்பூர்வ அதிகாரி **திரு. சிவக்குமார் S (+919843012371) / அல்லது நபர் திரு. ரங்கராஜ், கைபேசி (+917358709428)** அவர்களுக்கு ஏலப்புள்ளிகள் சமர்ப்பிக்க கடைசி நாள் அல்லது அதற்கு முன்பாக அதாவது **19.08.2020 அன்று மாலை 5.00 மணிக்கு முன்பு** வந்துசேருமாறு, அதிகாரப்பூர்வ அதிகாரி, **கொடாக் மஹிந்திரா வங்கி லிமிடெட்,** எண் 918, பூங்கா சாலை, ஈரோடு 638003 முகவரியிட்டு "**M/s. விராதரா இம்பெக்ஸ்**" அசையா சொத்துகள்/சொத்து கொள்முதலுக்கான விலைப்புள்ளி" என குறிப்பிட்ட முத்திரையிடப்பட்ட உறையில் ஈரோடில் மாற்றத்தக்க வகையில் **கொடாக் மஹிந்திரா வங்கி லிமிடெட்** பெயரிலான கேட்பு வரைவோலை அல்லது பண ஆணை மூலம் பத்தி (உ) இல் குறிப்பிட்டவாறான முன்வைப்புத்தொகையுடன் (EMD) தங்கள் ஒப்பந்தப்புள்ளியை சமர்ப்பிக்க வேண்டும். வெற்றிகர ஏலதாரரால் செலுத்தப்பட்ட முன்வைப்புத்தொகை விற்பனை விலைக்காக சரிகட்டப்படும். **(5)** முறையாக நிரப்பப்படாத ஒப்பந்தப்புள்ளிகள் அல்லது நிர்ணய விலைக்கு குறைவான ஏலப்புள்ளிகள் அல்லது முன்வைப்புத்தொகையால் இணைக்கப்படாத ஒப்பந்தப்புள்ளிகள் அல்லது இங்கே வரையறுக்கப்பட்ட மேற்கூறிய தேதி மற்றும் நேரத்திற்கு பிறகு பெறப்படும் ஒப்பந்தப்புள்ளிகள் செல்லத்தக்க ஒப்பந்தப்புள்ளிகளாக பரிசீலிக்கப்பட/கருதப்பட மாட்டாது, மேலும் அதற்கிணங்க நிராகரிக்கப்படும். முன்வைப்புத்தொகைக்கு வட்டி எதுவும் கிடையாது. **(6)** ஏலம் விடும் சொத்துகள் தொடர்பான ஏதேனும் வரிவிதிப்பு, பாத்யதை, வில்லங்கங்கள் அல்லது அரசு அல்லது பிற யாருக்கேனும் உரிய அனைத்து பிற நிலுவைகளுக்கு அதிகாரப்பூர்வ அதிகாரி அல்லது வங்கி பொறுப்பேற்காது. திட்டமிடும் ஏலதாரர் சட்டப்பூர்வ பொறுப்புகள், சொத்து வரி நிலுவைகள், மின்கட்டண நிலுவைகள் ஏனையவை உட்பட சொத்து மீதான வில்லங்கள் குறித்து தங்கள் சொந்த தனி விசாரணைகளை மேற்கொள்ள அறிவுறுத்தப்படுகிறார்கள். **(7)** ஒப்பந்தப்புள்ளி ஆவணத்துடன், திட்டமிடும் ஏலதாரர் வருமானவரித் துறையால் வழங்கப்பட்ட பான் அட்டை நகல்பிரதி (அல்லது படிவம் 60) மற்றும் ஆதார் அட்டை, கடவுச்சீட்டு, வாக்காளர் அடையாள அட்டை, குடும்ப அட்டை, ஓட்டுனர் உரிமம் ஏனையவை போன்ற அவருடைய அடையாள சான்று மேலும் இருப்பிட சான்று நகல்பிரதியையும் இணைக்க வேண்டும். **(8)** அசையா சொத்துகள்/சொத்து கடனீட்டு கடனீந்தோர்/கொடாக் மஹிந்திரா வங்கி லிமிடெடின் அதிகாரப்பூர்வ அதிகாரியால் ஏலப்புள்ளி ஏற்கப்படுவதற்கு உட்பட்டு, உயர்ந்தபட்ச ஏலதாரர்/ஒப்பந்ததாரருக்கு விற்பனை செய்யப்படும். மேற்கூறிய அசையா சொத்துகள்/சொத்துக்கான இயங்குதள/இடையீட்டு ஏலம் மேலே அட்டவணை பத்தி "எ" இல் குறிப்பிட்ட தேதி மற்றும் நேரத்தில் நடைபெறும். **(9)** அனைத்து நிலுவைகள் மற்றும் வெளிப்போக்குகள், அதாவது நகராட்சி வரிகள், பராமரிப்பு / சங்கம் கட்டணங்கள், மின்கட்டணம் மேலும் குடிநீர் வரிகள் அல்லது அனைத்து பிற நிலுவைகள் மேற்கூறிய அசையா சொத்துகள்/சொத்து தொடர்பான அனைத்து மிகைப்பாக்கி உட்பட அனைத்தும் வெற்றிகர ஏலதாரர்(கள்)/கொள்முதலாளரால் செலுத்தப்பட வேண்டும். **(10)** வெற்றிகர ஏலதாரர்/கொள்முதலாளர் விற்பனை தொடர்பாக அதிகாரப்பூர்வ அதிகாரியால் விலைப்புள்ளி ஏற்கப்பட்டதும் உடனடியாக விற்பனை தொகையின் (முன்வைப்புத்தொகை உட்பட) 25% செலுத்தப்பட வேண்டும், தவறினால், முன்வைப்புத்தொகை கைக்கொள்ளப்படும். **(11)** விற்பனை விலையின் மீதி 75% அதிகாரப்பூர்வ அதிகாரியால வெற்றிகர கொள்முதலாளருக்கு விற்பனை உறுதியை தெரிவித்ததன் 15 நாட்களுக்குள் அல்லது கடனீட்டுச் சொத்து உரிமை (அமலாக்கம்) விதிகள் 2002 இன் விதி–9 இன்படி கடனீட்டு கடனீந்தோரால் மேலும் முற்றிலும் தனிவிருப்ப முடிவில் எழுத்துப்பூர்வமாக ஒப்புக்கொண்ட நீட்டிக்கப்பட்ட காலத்திற்குள் செலுத்தப்பட வேண்டும். வரையறுக்கப்பட்ட காலத்திற்குள் விற்பனை விலையின் மீதி 75% அல்லது அதற்குரிய ஏதேனும் பகுதியை செலுத்துவதில் தவறும்பட்சத்தில், செலுத்தப்பட்ட தொகை கைக்கொள்ளப்படும் மேலும் கடனீட்டு கடனீந்தோர் மீண்டும் ஒருமுறை அசையா சொத்துகள்/சொத்தினை விற்பனை செய்யும் சுதந்திரம் பெறுவார் மேலும் தவறும் கொள்முதலாளர் அசையா சொத்துகள்/சொத்துக்குரிய அல்லது அதற்கான கொள்முதலுக்காக ஏற்கனவே செலுத்திய தொகையின் ஏதேனும் பகுதிக்குரிய அனைத்து உரிமைகளையும் இழப்பார். **(12)** இங்கே மேலே விவரிக்கப்பட்ட அசையா சொத்துகள்/சொத்து கீழே கையொப்பமிட்ட அதிகாரப்பூர்வ அதிகாரியால விற்பனை உறுதியான தேதியிலிருந்து தீ அல்லது திருட்டு அல்லது பிற விபத்துகள், மற்றும் பிற அபாயம் மூலமான இழப்பு அல்லது தேசம் உட்பட அனைத்து விதத்திலும் வெற்றிகர கொள்முதலாளரின் முழு பொறுப்பிலானதாகும். வெற்றிகர ஏலதாரர் எந்த காரணத்திலும் எத்தன்மையானாலும் விற்பனை நிறுத்த உரிமையுற மாட்டார். **(13)** ஒருவேளை சொத்துகளின் இறுதி ஏலத்தொகை/விற்பனை பரிசீலனைத்தொகை ₹50.00 லட்சம் அல்லது அதற்கு மேல் இருந்தால், வெற்றிகர ஏலதாரர் ஏலத்தொகையின் 1% விகிதத்தில் மூலத்தில் வரி பிடித்தம் செய்து அதை கடன்தாரரின் பான் எண்ணை அளித்து செலுத்திவிட வேண்டும் கடன்தாரரின் பான் எண்ணை ஏலம் முடிந்த பிறகு அதிகாரப்பூர்வ அதிகாரி/வங்கியிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம் மேலும் விற்பனை பரிசீலனையின் மீதி 99% தொகை வரையறுக்கப்பட்ட காலத்திற்குள் வங்கியில் செலுத்தப்பட வேண்டும். எனவே, உயர்ந்தபட்ச வெற்றிகர ஏலதாரர் வருமானவரிச் சட்டம் 1961 இன் பிரிவு 194–IA) இன்படி கடன்தாரரின் பான் மீது மறுசுவாதீனம் அடைந்த சொத்தின் கொள்முதல் மீது 1% விகிதத்தில் மூலத்தில் வரி பிடித்தம் செலுத்த கட்டுப்பட்டவர். **(14)** இவ்வகையில் ஏலம் கீழோன சொத்து விற்பனை பரிசீலனைத்தொகை ₹50.00 லட்சம் அல்லது அதற்கு மேல் இருந்தால் வெற்றிகர ஏலதாரர்/கொள்முதலாளர், மேற்கூறியவாறு (நிகர மூலத்தில் வரி பிடித்தம்) விற்பனை பரிசீலனையின் முழுத்தொகையை செலுத்தியதும், மேலும் விற்பனை நடைமுறைகளை நிறைவேற்றியதும், மூலத்தில் வரி பிடித்தம் செலுத்தப்பட்டிருக்கும் படிவம் எண் 26QB இல் சலான் மற்றும் அறிக்கை பெறப்பட்டதன் மீது மட்டும் சர்பாசி சட்டம் & விதிகள் 2002 கீழ் வரையறுக்கப்பட்ட மாதிரியின்படி அசையா சொத்துகள்/சொத்துக்கான ஒரு விற்பனை சான்றிதழ் வழங்கப்படும். **(15)** விற்பனை சான்றிதழை பதிவு செய்வது முற்றிலும் வெற்றிகர ஏலதாரரின் பொறுப்பாகும். மேற்கூறிய அசையா சொத்துகள்/சொத்துக்காக சர்பாசி சட்டம் & விதிகள் 2002 கீழ் வரையறுக்கப்பட்ட மாதிரியில் வழங்கப்பட்ட விற்பனை சான்றிதழை பதிவு செய்வது தொடர்பான முத்திரைத்தாள் தீர்வை, பதிவுக் கட்டணங்கள், பெயர்மாற்றம் கட்டணங்கள் மற்றும் அனைத்து பிற செலவுகள் மேலும் கட்டணங்கள் தொடர்பான அனைத்து செலவினங்களும் வெற்றிகர ஏலதாரர்/கொள்முதலாளரால் ஏற்கப்பட வேண்டும். பெயர்மாற்றம் தொடர்பாக மாநில சட்டம்/விதிகளின்படி விரைவில் விற்பனை சான்றிதழை பதிவுசெய்ய வேண்டும் இல்லையெனில் கொள்முதலாளர் பதிவு தாமதமாவதன் காரணத்தை குறிப்பிட்டு கடனீட்டு கடனீந்தோருக்கு ஒரு கோரிக்கை கடிதம் அளிக்க வேண்டும். **(16)** அதிகாரப்பூர்வ அதிகாரி உயர்ந்தபட்ச ஒப்பந்தப்புள்ளி அல்லது எதையேனும் அல்லது அனைத்து ஒப்பந்தப்புள்ளிகளையும் ஏற்க கட்டுப்பட்டவரில்லை மேலும் கொடாக் மஹிந்திரா வங்கி லிமிடெட், கடனீட்டு கடனீந்தோராக, எந்த காரணங்களையும் கருதாமல் ஏதேனுட்ம அல்லது அனைத்து ஏலப்புள்ளி(களை) நிராகரிக்க உரிமை கொண்டுள்ளது. ஒருவேளை, ஏலப்புள்ளிகள் நிராகரிக்கப்பட்டால், அதிகாரப்பூர்வ அதிகாரி தனி ஒப்பந்தம் மூலம் அசையா சொத்துகள்/சொத்து விற்பனைக்காக ஒப்பந்தப்புள்ளி அளித்த அல்லது திட்டமிடும் ஏலதாரர்கள் அல்லது பிற நபர்களுடன் பேரம் நடத்தலாம். விற்பனை கடனீட்டு கடனீந்தோர்/கொடாக் மஹிந்திரா வங்கி லிமிடெடின் அதிகாரப்பூர்வ அதிகாரி திருத்தப்பட்ட கடனீட்டுச் சொத்து உரிமை (அமலாக்கம்) விதிகள் 2002 ஒப்புதலுக்கு உட்பட்டது. **(17)** திட்டமிடும் ஏலதாரர்கள்/ஒப்பந்ததாரர்கள் தாங்களாகவோ அல்லது அவர்தம் முறையான அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதியோ அன்றி வேறு யாரும் ஏலத்தில் / விற்பனை செயல்பாட்டில் பங்கேற்க அனுமதிக்கப்பட மாட்டார். இருந்தபோதும், விற்பனை சான்றிதழ் ஏலப்புள்ளி விண்ணப்பப் படிவம் சமர்ப்பிக்கப்பட்டிருக்கும் பெயரிலான கொள்முதலாளர் பெயரில் மட்டும் பதிவு செய்யப்படும். **(18)** அதிகாரப்பூர்வ அதிகாரி அவருடைய தனிவிருப்ப முடிவில், முன் அறிவிப்பின்றி, இந்த விற்பனை அறிவிப்பின் ஏதேனும் விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளை மாற்ற உதிமை கொண்டுள்ளார் & மேற்கூறிய அடமான அசையா சொத்துகள்/சொத்தின் மறுசுவாதீன விற்பனையில் சந்தைப்படுத்தும் முகமை அல்லது சேவை வழங்குரின் சேவைகளை அவர்தம் தொழில்முறை கட்டணத்தில் பெறுவதற்கும் உரிமை கொண்டுள்ளார் இந்த கட்டணம் கடன்தாரரிடமிருந்து வசூலிக்கப்படும். **(19)** ஒருவேளை, கடனீட்டு கடனீந்தோருக்கு ஏற்பட்ட அனைத்து செலவு, கட்டடணங்கள் மற்றும் செலவிளங்களுடன் சேர்த்து வங்கியின் அனைத்து நிலுவைகளும் விற்பனைக்காக நிர்ணயிக்கப்பட்ட தேதியில் அல்லது அதற்கு முன்பு எந்த நேரத்திலும் மேற்கூறிய பெயரிலான கடன்தாரர்/உப–கடன்தாரர்(கள்) மூலம் செலுத்தப்பட்டு விட்டால், பிறகு அசையா சொத்துகள்/சொத்து விற்பனை செய்யப்படாது மேலும் எதிர்நோக்கும் ஏலதாரர்களிடமிருந்து பெறப்பட்ட அனைத்து ஏலப்புள்ளிகளும் கொடாக் மஹிந்திரா வங்கி லிமிடெடுக்கு எதிரான ஏதேனும் பொறுப்பு/கோருரிமை இன்றி அவர்களிடம் திருப்பியளிக்கப்படும். **(20)** இந்த பிரசுரம் கடன்தாரர்கள்/அடமானதாரரு(களு)க்கு நிலுவைகள் முழுமையாக திருப்பி செலுத்தப்படா விட்டால் மேற்குறிப்பிட்ட தேதியில் விற்பனை நடைபெறுவது குறித்த 15 நாட்கள் அறிவிப்பும் ஆகும். **(21)** ஒப்பந்தப்புள்ளி ஆவணங்களை கொடாக் மஹிந்திரா வங்கி லிமிடெடின் உள்ளூர் கிளையிலிருந்து பெற்றுக் கொள்ளலாம். விரிவான விற்பனை விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளுக்கு, கடனீட்டு கடனீந்தோர் இணையதளத்தில் கொடுக்கப்பட்ட இணைப்பு அதாவது **https://www.kotak.com/en/bank-auctions.html** காணவும். **(22)** கடன்தாரர்கள்/அடமானதாரருக்கு இதன்மூலம் தெரிவிக்கப்படுவதாவது அறிவிப்பு பிரசுரமான தேதியிலிருந்து 15 நாட்களுக்குள் கொடாக் மஹிந்திரா வங்கி லிமிடெடின் பொறுப்பிலிருக்கும் மேற்கூறிய அடமான சொத்துகள்/சொத்தினுள் இருக்கும் தங்கள் தனிப்பட்ட வீட்டுப் பொருட்கள்/சாமான்களை, கொடாக் மஹிந்திரா வங்கி லிமிடெடுக்கு முன்கூட்டி தகவல் அளித்து, எடுத்துக்கொள்ள வேண்டும் தவறினால் கொடாக் மஹிந்திரா வங்கி லிமிடெட் அதற்கு பொறுப்பேற்காது மேலும் கடன்தாரர்கள்/அடமானதாரர் பொறுப்பில் அகற்றப்படும்.

சிறப்பு அறிவுறுத்தல்: கடைசி நேரத்தில் ஏலப்புள்ளி அளிப்பதை ஏலதாரர்கள் தங்கள் சொந்த விருப்பதில் தவிர்க்க வேண்டும் அதேபோன்று ஏதேனும் பிழை/கோளாறுகளுக்கு கொடாக் மஹிந்திரா வங்கி லிமிடெட் பொறுப்பாகாது இவ்வித எதிர்பாரா சூழ்நிலைகளை தடுக்கும் வகையில் ஏலதாரர்கள் இவ்வித சூழ்நிலையை சமாளிக்க ஏதுவாக மேலும் ஏலத்தில் வெற்றிகரமாக பங்கேற்க ஏதுவாக்கும் வகையில் அனைத்து தேவையான ஏற்பாடு/மாற்று ஏற்பாடுகள் ஏனையவற்றை மேற்கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். ஏல விற்பனை பத்தி எண்–எ இல் குறிப்பிட்டவாறு ஏல விற்பனை காலாவதி வரம்பில் தன்னிச்சையாக முடிவுறும். அதிகாரப்பூர்வ அதிகாரி 15 நிமிடங்கள் ஏல விற்பனையை நீட்டிக்க தனிவிருப்ப உரிமையை பயன்படுத்தலாம்

நாள்: 05.08.2020, இடம்: ஈரோடு

ஒம்/– அதிகாரப்பூர்வ அதிகாரி, கொடாக் மஹிந்திரா வங்கி லிட்.